[11th July 1962]

திரு. .மீ. கலியாணசுந்தரம் : அந்த மாதிரி 'ரிவர் போர்டு' அமைக்க வேண்டிய காரணம் என்னவென்று கூறப்பட்டது? காவேரி ஆற்றுக்கு மட்டும் அப்பேர்ப்பட்ட போர்டு அமைக்க வேண்டுமென்று கோரப்பட்டதேன்? மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து உற்பத்தியாகி அரபிக்கடலில் விழும் நதிப் பகுதிகளிலும் இந்தமாதிரி போர்டு அமைக்க உத்தேசம் உண்டா?

கனம் திரு. வி. ராமையா : காவேரி நதிக்கு மட்டும் 'ரிவர் போர்டு' அமைக்க வேண்டுமென்று ஆலோசனை இல்லை. அகில இந்தியா ரீதியாக ஒவ்வொரு 'ரிவர் வாலி'-யும் நல்லவிதமாகப் பயன்படுத்தப்படவேண்டுமென்ற நோக்கத்திற்காக ஒரு போர்டு அமைத்தால் நல்லது என்று நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள். எந்தெந்த பள்ளத்தாக்குகள் சரியான முறையில் பயன்படுத்தப் படவில்லையோ அது போன்ற பள்ளத் தாக்குகளை நல்ல முறையில் பயன்படுத்துவதற்காக ஆலோசனை செய்யப்படுகிறது. காவேரியைப் பொறுத்தவரையில் அதிகமாக 'எக்ஸ்ப்ளாயிட்' ஆன ரிவர் என்பதை இந்தியாவில் இருக்கக் கூடிய அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். அந்தத் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்வதற்கான நேரடி நடவடிக்கைகளில் நமது அரசாங்கத்துக்கும், மைசூர் அரசாங்கத்திற்கும் ஒப்பந்தங்கள் இருக்கும் காரணத்தால் மூன்றாவது அமைப்பு தேவையில்லை என்பது நமது அரசாங்கத்தின் கருத்து.

முந்திரி காடுகள் (செங்கற்பட்டு மாவட்டம்)

*243. கேள்வி.—திரு. முனு. ஆதி : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள முந்திரிக் காடுகளின் பரப்பு எவ்வளவு?

(இ) இவற்றால் 1961-62-ல் அரசாங்க வருமானம் எவ்வளவு?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (அ) A total area of 24,998 acres has been raised with cashew in Chingleput district.

(இ) During 1961–62, a revenue of Rs. 1,871 was realized by the lease of the right to collect and remove the cashew fruits.

Pesticides (aerial spraying)

*244 *Q.*—SRI N. SHANMUGASUNDARAM (on behalf of SRI V. Sankaran) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal for the aerial spraying of pesticides to eradicate the red hairy caterpillars in Usilampatti and other infected areas in Madurai district?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.